ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1857/11 - 2014 අප්‍රේල් මස 09 වැනි බදාදා - 2014.04.09

*1857/11 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*கட்டளை இல. 26.*

### 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்

20 (5) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 20 (5) ஆம் பிரிவினால் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, உற்பத்தியாளர், வியாபாரி அல்லது விநியோகஸ்தர் எவரும் கீழே தரப்பட்டுள்ள ஆகக்கூடுதலான சில்லறை விலைகளுக்கு மேலாக பின்வரும் அரிசி வகைகளை விற்பனை செய்யவோ, விற்பனைக்கு விடவோ அல்லது விற்பனைக்கு கோரவோ அல்லது பைகளில்/பொதி செய்து அல்லது வேறு ஏதேனும் வடிவங்களில் விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ முடியாதென கட்டளையிடுகின்றது.

| | ஆகக்கூடிய சில்லறை விலை (கிலோ கிராமொன்று) ரூபா சதம் |
|---|---|
| சம்பா – கல் நீக்கப்பட்டதும் சுத்திகரிக்கப்பட்டதும் (கீரி சம்பா, சூதுரு சம்பா தவிர்ந்த ஏனையவை) | 77.00 |
| வெள்ளை நாடு | 68.00 |
| சிவப்பு நாடு | 66.00 |
| வெள்ளை பச்சை | 66.00 |
| சிவப்பு பச்சை | 60.00 |

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, 2009, மாச்சு மாதம் 18 ஆந் திகதிய 1593/28 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 5 ஆம் இலக்க கட்டளையை இக்கட்டளையினால் இரத்துச் செய்கின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2014, ஏப்பிறல் 09.

4- 699